முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1024

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.07.2022, செவ்வாய்கிழமை

1. பிரணவ சக்தியே அரங்கா வாழ்க
பிரணவக் குடில் படைத்த தேசிகா வாழ்க
சரவணச்சுடரேற்றி உலகை காக்க
சற்குருவாய் வாழுகின்ற ஞானியே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட சுபகிருது நள்ளி திங்களில்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 03 நாள், 19.07.2022 செவ்வாய்கிழமை)
அரங்கன் சக்தி பெருக எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனைகொண்டே இந்த கலியில்
உயர் ஞான வழிகளை ஆறுமுகன் யான்
குறைவின்றி வழிநடத்தி வருதலுற
குருராஜன் அரங்கன் தொடர்புகொண்டாலே போதும்
4. கொண்டதொரு மக்கள் அனைவருக்கும்
குருபரன் என் அருளோடு ஞான சித்தி
உண்டாகும் இலகுவாய் இந்த கலியுகத்தில்
உயர்ஞானம் பெருக அதுமுதலாய்
5. முதலாக உலகம் எங்கிலும்
முழுமைபட மக்களுக்கு ஞானமாற்றம்
வலுவாக அரங்கன் தயவாக
வாரி வழங்குகின்ற அரங்கன் தர்மமாக
6. ஆகவே சித்திகள் பெருகி இனிதே
அகிலமே ஞானலோகம் மாற்றம் பெறும்
மகிழவே அரங்கன் தேடுகின்ற வண்ணம்
மகான்கள் உலகமெங்கும் பெருகியே
7. பெருகியே பேருலகில் ஞான ஆட்சி
புகலுவேன் அரங்கன் சக்தி கொண்டு உருவாக நேரும்
வருமுலகில் அன்னதனால் கலியுகத்தார்
வணங்கி அரங்கன் வழி வரவே இந்த அற்புதம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–